திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் விருத்தாச்சலத்தில் உள்ள முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைக்கு இந்த அமெரிக்க நிறுவனம் ஏதாவது உதவி அளித்து இருக்கிறதா ? அரசிடம் அதை மேலும் விரிவுபடுத்துவதற்கு திட்டம் ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தொடர்புடைய கேள்வி அல்ல.

பருவ நிலையை முன்கூட்டி அறிய புதிய சாதனம்.

***3464. திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பருவ நிலையை முன்கூட்டி அறிய உதவும் வகையில் கோவை விவசாயப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்துள்ள புதிய சாதனத்தை அரசு எந்தெந்த இடங்களில் அமைக்க உத்தேசித் துள்ளது ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசித்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பருவ நிலையை முன்கூட்டி அறிய முடியாத காரணங்களினால் அதிகமான பணத்தைக் கொடுத்து வீரிய வித்துக்களை வாங்கி விவசாயிகள் மானாவாரி பகுதிகளிலே போடுகிறார்கள். குறிப்பிட்ட நேரத்திலே ஒரு வார காலத்திற்குள் மழை பெய்யும் என்று சொன்னால், அந்த விதை கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, கோவில்பட்டி, சங்கரன்கோயில் போன்ற மானாவாரி பகுதிகளில் பருவ நிலையை முன்கூட்டியே தெரிவிக்கக்கூடிய கருவியைப் பொருத்தி, விவசாயிகளுக்கு அவ்வப்போது பருவ நிலைகளைச் சொல்வதற்கான ஏற்பாட்டை செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் மேலும் 5 மையங்கள் உருவாக்கப்பட உள்ளன. இவை தமிழகத்தில் 7 வேளாண்மை கால நிலைப் பகுதிகளில் அமையவுள்ளன. இந்தத் திட்டத்திற்கான நிலைகள் விரைவில் அறிவிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதாக பத்திரிகையிலே பார்த்தேன். இந்தப் புதிய சாதனம் முன்கூட்டியே என்னென்ன பருவ நிலைகளை அறிந்து சொல்லக்கூடிய திறம் படைத்ததாக இருக்கும் என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 50 ஆண்டுக் காலங்களில் பெய்த மழையின் அளவை சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்து, அது வார அளவு வரை கணக்கிடப்பட்டு கொண்டுவரப் பட்டிருக்கிறது. கூடுமானவரை, மழை பெய்யும் அல்லது வேறு இதர பருவ நிலைகளை 10 நாட்களுக்கு முன்பு அறிவிக்கிற நிலை தற்போது உள்ளது.

உணவு வழங்கல் துறையின் பறக்கும் படை.

*330. **திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக அரசின் உணவு வழங்கல் துறைக்கு உதவியாக பறக்கும் படை என்ற பெயரில் (விஜிலன்ஸ் போலீஸ் படைப் பிரிவு) ஒரு படைப் பிரிவு பணிபுரிவது உண்மையா ?

(ஆ) அவர்களுக்கு அரசு வழங்கியுள்ள அதிகாரம் என்னென்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பறக்கும் படை என்ற பெயரில் இல்லையென்றாலும் ஒரு காவல் ஆய்வாளர், ஒரு சார் காவல் ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 6 அல்லது 7 காவலர்களைக் கொண்டு ஒரு காவல் படைப் பிரிவு (Police Squad) தொலை பேசிச் செய்தி மற்றும் ஈட்பு வசதிகளுடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கி வருகிறது. அத்தியாவசியப் பண்டங்களை பதுக்கி வைத்தல், கடத்தல், அத்தியாவசியப் பண்டங்களில் கலப்படம் செய்தல் மற்றும் நியாயவிலைக் கடைகளில் நடக்கும் முறைகேடுகள் குறித்து ஏதேனும் புகார்கள் வந்தால், இப்பிரிவு உடனே அந்த இடத்திற்குச் சென்று நடவடிக்கை எடுக்கிறது. சென்னையில் மட்டும் மூன்று படைப்பிரிவுகள் உள்ளன. வாய்மொழியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ வரும் புகார்கள் மீதும் இப் பிரிவுகள் உடனடி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் சுமார் 200 வழக்குகளைக் கண்டுபிடித்து சுமார் ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள அத்தியாவசியப் பண்டங்களைக் கைப்பற்றி, குற்றவாளிகள்மீது குற்ற வழக்குகள் தொடர்கின்றன.